## ஒரு பார்வை - பகுதி 1

தீர்ப்பு நாளின் காட்சிகள் படம்பிடித்து காட்டப்பட்டுள்ளது. சொர்க்கத்தில் வசிப்பவர்களுக்கு அல்லாஹ்வின் அருட்கொடைகளும், பாவிகளுக்கு அவர்களுக்கு வாக்களிக்கப்பட்ட நரகமும் உண்டு. அன்று அவர்கள் கரங்கள் பேசும்; கால்கள் அவர்கள் செய்த தவறுகளுக்கு சாட்சியாக இருக்கும். மறுமை வாழ்க்கை உண்மையானது என்பதை வலியுறுத்தும் செய்தியுடன் ஸூரா அஸ்ஸா∴ப்பாத் தொடங்குகிறது.

## தராவிஹ் - 19: (ரக்அத் 1 முதல் 4)

### ஸூரா - 36, யாஸீன்; வசனம்: 33 - 83; பிரிவு: 3 - 5

1. "அல்லாஹ் உங்களுக்கு வழங்கிய செல்வங்களிலிருந்து அவன் வழியில் நீங்கள் செலவழியுங்கள்" என்று சொல்லப்பட்டால், "இந்த ஏழைகளுக்கு அல்லாஹ்வால் உணவளிக்க முடியாதா? நீங்கள் பகிரங்கமான வழிகேட்டிலேயே இருக்கின்றீர்கள்" என ஈமான் கொண்டவர்களைப் பார்த்துக் கூறுகிறார்கள். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 3)

2. மேலும் அவர்கள் கியாமத் நாள் எப்போது வருமென்று பரிகாசமாகக் கேட்கின்றனர். உண்மையில் ஒரே ஒரு பெரும் சப்தத்திலேயே அவர்கள் பிடிக்கப்படுவார்கள். அவர்கள் தர்க்கம் செய்து கொண்டிருக்கும் நிலையிலேயே அது அவர்களைப் பிடித்துக் கொள்ளும். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 3)

3. ஸூர் ஊதப்படும் நாளில் கப்ரிலிருந்து வெளியாகி அவர்களுடைய இறைவனின் பக்கம் விரைந்து செல்வார்கள். "அந்தோ! எங்கள் துயரமே! எங்கள் தூங்குமிடங்களிலிருந்து

எங்களை எழுப்பியவர் யார்?" என கேட்பார்கள். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 4)

4. கியாமத் நாளில் எந்தவொரு ஆன்மாவுக்கும் அநீதம் இழைக்கப்படாது. நீங்கள் செய்தவற்றுக்கான கூலியினை பெற்றுக்கொள்வீர்கள். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 4)

5. சுவர்க்கவாசிகள் அவர்களுடைய வேலைகளில் மகிழ்ச்சியாக இருப்பார்கள். அவர்களுடைய மனைவியர்களுடன் நிழல்களிலுள்ள கட்டிலில் சாய்ந்திருப்பார்கள். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 4)

6. அங்கே அவர்களுக்கு பலவகையான பழங்கள் உண்டு. இன்னும் அவர்களுக்கு அவர்கள் கேட்பது கிடைக்கும். மிகக் கிருபையாளனான அல்லாஹ்விடமிருந்து அவர்களுக்கு 'ஸலாமுன்' - சாந்தி நிலவட்டும் என்று முகமன் கூறப்படும். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 4)

7. பாவிகள் தனியாக பிரித்து வைக்கப்படுவார்கள். அல்லாஹ் அவர்களிடம் "நீங்கள் ஷைத்தானை வணங்கக் கூடாது. அவன் உங்களுக்கு பகிரங்க எதிரி என்று உங்களிடம் நான் உறுதிமொழி பெறவில்லையா?" உங்களில் அதிக மக்களை அவன் வழி கெடுத்து விட்டான். இதனை நீங்கள் விளங்க வேண்டாமா?" என கூறுவான். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 4)

8. "இதுதான் உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட நரகம் ஆகும். நீங்கள் நிராகரித்துக் கொண்டிருந்ததனால் இன்று இதனுள் நுழையுங்கள்" என்று குற்றவாளிகளிடம் கூறப்படும். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 4)

9. கியாமத் நாளில் அவர்களுடைய வாய்களுக்கு சீல் வைக்கப்படும். அவர்களுடைய கரங்கள் அவர்கள்

செய்தவற்றை குறித்து பேசும். அவர்களுடைய கால்கள் சாட்சி சொல்லும். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 4)

10. கால்நடைகளிலுள்ள அல்லாஹ்வின் அத்தாட்சிகளை மக்கள் சிந்திக்க வேண்டாமா? மனிதர்களுக்கு கட்டுப்படக்கூடிய வகையில் அல்லாஹ் அதைப் படைத்துள்ளான். அவர்கள் பயணிப்பதற்கும், பால், இறைச்சி உள்ளிட்ட பல்வேறு பலன்களையும் உள்ளடக்கியவாறு அவைகளை அல்லாஹ் படைத்துள்ளான். இவற்றுக்கெல்லாம் அவர்கள் நன்றி செலுத்த மாட்டார்களா? (ஸூரா - யாஸீன்; பிரிவு: 5)

11. இந்திரியத் துளியிலிருந்து மனிதனை அல்லாஹ் எவ்வாறு படைத்தான் என்று சிந்திக்க வேண்டாமா? ஆனால், அவர்கள் வெளிப்படையாக வாதிடுபவர்களாக இருக்கின்றனர். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 5)

12. ஒரு பொருளை அல்லாஹ் படைக்க நாடுகின்ற போது அவன் சொல்வதெல்லாம் "குன்- ஆகுக" என்று தான். அது உடனே உண்டாகி விடும். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 5)

13. அனைத்து பொருட்களின் ஆட்சி அதிகாரம் யார் கைவசமுள்ளதோ, அந்த அல்லாஹ்வே தூயவன். நீங்கள் அவனிடமே திரும்பக் கொண்டுவரப்படுவீர்கள். (ஸூரா - யாஸீன்; பிரிவு: 5)

## ஸூரா - 37, அஸ்ஸா∴ப்பாத்; வசனம்: 1 - 21; பிரிவு: 1

14. ஏகஇறையை மறுப்போர், எந்த சான்றைக் கண்டாலும் கேலி செய்கின்றனர். "இது பகிரங்கமான சூனியமேயன்றி வேறில்லை" என்கின்றனர். "நாங்கள் இறந்து, மண்ணாகவும் எலும்புகளாகவும் ஆகிய பின்பு, மீண்டும் உயிர்ப்பித்து எழுப்பப்படுவோமா?" என்று கேள்வி எழுப்புகின்றனர். (ஸூரா - அஸ்ஸா∴ப்பாத்; பிரிவு: 1)

15. “ஒரே ஒரு சப்தம் தான். பிறகு நடப்பவற்றை அவர்களே கண்கூடாக பார்ப்பார்கள்” என்று அவர்களிடம் சொல்லுங்கள். (ஸூரா - அஸ்ஸாஃப்பாத்; பிரிவு: 1)

## ஒரு பார்வை - பகுதி 2

**தீர்ப்பு நாளின் காட்சிகள் விவரிக்கப்பட்டுள்ளன. அநியாயம் செய்தவர்கள் தங்களை தவறான வழியில் செலுத்தியதற்காக, தங்கள் தலைவர்களை பழிசுமத்திக் கொள்வார்கள். சொர்க்கத்தில் இருப்பவர்கள் வெகுமதிகளுடன், மகிழ்ச்சியாக நிரந்தரமாக இருப்பார்கள். நரக நெருப்பின் பயங்கரமான காட்சிகளும், அதிலுள்ள ஜக்கூம் மரமும் விவரமாக கூறப்பட்டுள்ளது. இப்ராஹீம் (அலை) தங்களது மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களை அறுத்து பலியிடத் தயாராகும் மிகப்பெரிய சோதனைகளில் ஒன்றான நிகழ்வு பற்றிய வரலாறு விவரிக்கப்பட்டுள்ளது. நூஹ் (அலை), மூஸா (அலை), ஹாரூன் (அலை), இல்யாஸ் (அலை) மற்றும் லூத் (அலை) ஆகியோரின் வரலாறுகள் அல்லாஹ்வை நிராகரிப்பதன் விளைவுகளை நினைவூட்டுகின்றன. யூனுஸ் (அலை) திமிங்கலத்தால் விழுங்கப்பட்ட வரலாறு கொடுக்கப்பட்டுள்ளது**

## தராவிஹ் - 19: (ரக்அத் 5 முதல் 8)

### ஸூரா - 37, அஸ்ஸாஃப்பாத்; வசனம்: 22 - 182; பிரிவு: 2 - 5

1. **கியாமத் நாளின் காட்சிகள் இங்கு கூறப்பட்டுள்ளது. "அநியாயம் செய்தவர்களையும், அவர்களுடைய கூட்டாளிகளையும், அவர்கள் வணங்கிக் கொண்டிருந்தவற்றையும் ஒன்று திரட்டுங்கள். அவர்களுக்கு நரகத்தின் வழியைக் காட்டுங்கள்" என்று கூறப்படும். (ஸூரா - அஸ்ஸாஃப்பாத்; பிரிவு: 2)**

2. **அவர்களை நரகிலே வானவர்கள் தள்ளும்பொழுது, "அங்கேயே அவர்களை தடுத்து நிறுத்துங்கள். அவர்கள் விசாரிக்கப்பட வேண்டியவர்கள்" என்று அல்லாஹ் கூறுவான். (ஸூரா - அஸ்ஸாஃப்பாத்; பிரிவு: 2)**

3. **"உங்களுக்கு என்ன நேர்ந்தது? நீங்கள் ஏன் ஒருவருக்கொருவர் (உலகில் செய்தது போன்று) உதவி செய்து**

கொள்ளாமல் இருக்கின்றீர்கள்?", என்று கேட்கப்படும். ஆனால் அந்நாளில் அவர்கள் சரணடைந்தவர்களாக இருப்பார்கள். (ஸூரா - அஸ்ஸாஃப்பாத்; பிரிவு: 2)

4. அநியாயம் செய்தவர்கள் தங்கள் தலைவர்களிடம் கேள்வி கேட்டு தர்க்கத்தில் ஈடுபடுவார்கள். அவர்களில் ஒருவருக்கு ஒருவர் பழிசுமத்திக்கொள்வார்கள். ஆனால் அன்றைய தினம் அவர்கள் அனைவரும் வேதனையில் சம பங்காளிகளாக இருப்பர். (ஸூரா - அஸ்ஸாஃப்பாத்; பிரிவு: 2)

5. தேர்ந்தெடுக்கப்பட்ட அல்லாஹ்வின் அடியார்களுக்கு அறியப்பட்ட வாழ்வாதாரம் உண்டு. பழங்கள் நிரம்பிய சுவனப் பூஞ்சோலையில் இருப்பார்கள். மென்மையான கட்டிலில் சாய்ந்த வண்ணம் எதிரெதிரே பார்த்துக்கொண்டு இருப்பார்கள். (ஸூரா - அஸ்ஸாஃப்பாத்; பிரிவு: 2)

6. தெளிந்த பானம் நிரம்பிய குவளைகள் அவர்களைச் சுற்றி சுற்றி கொண்டு வரப்படும். பார்வைகளை தாழ்த்திய நீண்ட கண்கள் கொண்ட சுவனத்து அழகிகளும் அவர்களுக்குத் துணையிருப்பர். நிச்சயமாக அப்பெண்கள் (சிறகுகளால்) மறைக்கப்பட்ட முட்டைகளைப் போலிருப்பர். (ஸூரா - அஸ்ஸாஃப்பாத்; பிரிவு: 2)

7. அப்போது சுவனத்தில் இருக்கும் அவர்களில் ஒருவர், "கியாமத் நாளைப்பற்றி நம்பிக்கை இல்லாமல் கேள்வி கேட்ட நண்பனொருவன் எனக்கு இருந்தான்" என்று கூறுவார். "நீங்கள் அவனைப் பார்க்க விரும்புகிறீர்களா?" என்று கேட்கப்படும். (ஸூரா - அஸ்ஸாஃப்பாத்; பிரிவு: 2)

8. அப்போது அவர் கீழே குனிந்து நரக நெருப்பின் மையப் பகுதியில் தன் நண்பரைக் காண்பார். பிறகு அவனைப் பார்த்து, "உலகிலிருந்த போது அல்லாஹ்வின் மீதாணையாக நீ என்னை வழிகெடுத்து நாசமாக்க முற்பட்டாயே!

அல்லாஹ்வின் அருள் இல்லாதிருந்தால், நானும் உன்னைப்போல நரகத்தில் இருந்திருப்பேன்" என்று கூறுவார். (ஸூரா - அஸ்ஸா∴ப்பாத்; பிரிவு: 2)

9. (சொர்க்கத்தில்) இது சிறந்த உபசரிப்பா? அல்லது (நரகத்தில் கொடுக்கப்படும்) கள்ளி மரமா? நிச்சயமாக அல்லாஹ் அந்த மரத்தை அநீதியாளர்களுக்கு ஒரு சோதனையாகவே ஆக்கியுள்ளான். (ஸூரா - அஸ்ஸா∴ப்பாத்; பிரிவு: 2)

10. அந்த மரம் (ஐக்கூம்) நரக நெருப்பின் கீழே வளருகிறது. அதனுடைய பழங்கள் ஷைத்தானுடைய தலைகளைப் போன்றிருக்கும். அதிலிருந்தே அவர்கள் சாப்பிடுவார்கள். அதன் மூலம் வயிறுகளை நிரப்பிக் கொள்வார்கள். (ஸூரா - அஸ்ஸா∴ப்பாத்; பிரிவு: 2)

11. பிறகு அதற்கு மேல் அவர்களுக்கு (சீழும், சலமும் கலந்த) கொதிக்கும் நீர் குடிபானமாக கொடுக்கப்படும். பிறகு அவர்கள் திரும்பிச்செல்ல வேண்டியது நரகத்திற்குத்தான். (ஸூரா - அஸ்ஸா∴ப்பாத்; பிரிவு: 2)

12. நிச்சயமாக இவர்கள் தங்களின் மூதாதையர்களை வழி தவறியவர்களாகவே கண்டனர். இருப்பினும் அவர்களின் அடிச்சுவடுகளிலேயே இவர்கள் விரைந்து கொண்டிருந்தார்கள். (ஸூரா - அஸ்ஸா∴ப்பாத்; பிரிவு: 2)

13. நூஹ் (அலை) அவர்களை அல்லாஹ் இங்கு நினைவு கூறுகிறான். அல்லாஹ் அவர்களையும், அவர்களது மக்களையும் மிகப் பெரும் அழிவிலிருந்து எவ்வாறு காப்பாற்றினான் என்பதை நினைத்துப் பாருங்கள். (ஸூரா - அஸ்ஸா∴ப்பாத்; பிரிவு: 3)

14. வெள்ளப் பிரளயத்துக்குப்பின் அவருடைய சந்ததியரை மட்டுமே எஞ்சியிருப்போராக ஆக்கினோம். பிற்காலத்தில்

அவர் பெயரை நிலைக்கவிட்டோம். அகிலத்தார்களில் நூஹ் மீது ஸலாம் - சாந்தி உண்டாவதாக! (ஸூரா - அஸ்ஸா..ப்பாத்; பிரிவு: 3)

15. இப்ராஹீம் (அலை) மற்றும் அவர்களது மகன் இஸ்மாயீல் (அலை) இடையே நடந்த உரையாடல் இங்கு நினைவு கூறப்படுகிறது. இப்ராஹீம் (அலை) அவர்கள் தன் மகன் இஸ்மாயீல் (அலை) அவர்களிடம், “எனதருமை மகனே! நான் உன்னை அறுத்து பலியிடுவதாக கனவு கண்டேன். இதைப்பற்றி உம் கருத்து என்ன?" என்று கேட்டார்கள். (ஸூரா - அஸ்ஸா..ப்பாத்; பிரிவு: 3)

16. அதற்கு இஸ்மாயீல் (அலை), “என் தந்தையே, உங்களுக்கு கட்டளையிடப்பட்டதை நிறைவேற்றுங்கள். இன்ஷா அல்லாஹ்! பொறுமையாளனாக நானிருப்பேன்” என்றார்கள். (ஸூரா - அஸ்ஸா..ப்பாத்; பிரிவு: 3)

17. இப்ராஹீம் (அலை) அவர்கள் தன் மகனை அறுத்துப் பலியிட அவரை முகம் குப்புற கிடத்திய பொழுது, அல்லாஹ் அவர்களிடம், “இப்ராஹீமே! (நிறுத்துங்கள்!) உங்கள் கனவினை நீங்கள் நிறைவேற்றி விட்டீர்கள்” என்று கூறினான். (ஸூரா - அஸ்ஸா..ப்பாத்; பிரிவு: 3)

18. நிச்சயமாக இதுதான் வெளிப்படையான சோதனையாகும். மகத்தான ஒரு பலிப்பிராணியை அவருக்கு ஈடாக்கினான். மேலும் பின்வரும் சந்ததியருக்கு அவர் பெயரை நிலைக்க விட்டான். இப்ராஹீம் மீது ஸலாம் - சாந்தி உண்டாவதாக! இவ்வாறுதான் நன்மை செய்வோருக்கு அல்லாஹ் கூலி கொடுக்கிறான். (ஸூரா - அஸ்ஸா..ப்பாத்; பிரிவு: 3)

19. மூஸா (அலை), ஹாரூண் (அலை) ஆகிய இருவர் மீதும் அல்லாஹ் செய்த உபகாரத்தை நினைவு கூறுகிறான். அவ்விருவரையும், அவர்களுடைய சமூகத்தாரையும்

மிகப்பெரும் துன்பத்திலிருந்து காப்பாற்றினான். மேலும் அவர்களுக்கு தௌராத் வேதத்தை வழங்கி, நேரான வழியில் செலுத்தினான். மூஸா மற்றும் ஹாரூண் ஆகிய இருவர் மீதும் ஸலாம் - சாந்தி உண்டாவதாக! (ஸூரா - அஸ்ஸா:ப்பாத்; பிரிவு: 4)

20. இல்யாஸ் (அலை) அவர்கள் தனது மக்களை எச்சரித்தார், அவர்களே உருவாக்கிக்கொண்ட ப:ளு என்ற சிலையை வணங்க வேண்டாம் என எச்சரித்தார். இனிவரும் சந்ததியினரிடம் இல்யாஸ் (அலை) அவர்களின் நற்பெயரை அல்லாஹ் நிலைக்கச் செய்தான். இல்யாஸ்மீது ஸலாம் - சாந்தி உண்டாவதாக! (ஸூரா - அஸ்ஸா:ப்பாத்; பிரிவு: 4)

21. லூத்(அலை) அவர்களையும், அவர்களுடைய குடும்பத்தில் உள்ளவர்களையும் அல்லாஹ் காப்பாற்றினான். குற்றவாளிகளுடன் தங்கிவிட்ட வயதான அவரது மனைவியைத் தவிர. நீங்கள் இரவிலும், அதிகாலை நேரத்திலும் அவர்கள் வசித்த இடங்களைக் கடந்து செல்கின்றீர்கள். (அதனைப் பார்த்து) நீங்கள் சிந்திக்க வேண்டாமா? (ஸூரா - அஸ்ஸா:ப்பாத்; பிரிவு: 4)

22. யூனுஸ் (அலை) இறைத்தூதர்களில் ஒருவராய் இருந்தார். அவர் (அல்லாஹ்வின் அனுமதி இல்லாமல்) நிரம்பிய கப்பலை நோக்கி (துப்பி) ஓடினார். அக்கப்பலிலுள்ளவர்களோடு சீட்டுக்குலுக்கிப் போட்டதில் இவர் தோற்றுப்போனார். அதனால் அவர் கடலில் போடப்பட்டார். (ஸூரா - அஸ்ஸா:ப்பாத்; பிரிவு: 5)

23. கடலில் போடப்பட்ட அவரை மீன் விழுங்கிக் கொண்டது. அவர் (தம்மையே) நிந்திப்பவரானார். (ஸூரா - அஸ்ஸா:ப்பாத்; பிரிவு: 5)

24. அவர் மீன் வயிற்றினுள் இருந்துகொண்டு இறைவனிடம் பாவமன்னிப்பு கேட்டு அவனை துதிசெய்தார். பின்னர் இறைவன் அவரை நலிவுற்ற நிலையில் திறந்த வெளியில் கொண்டு வந்தான். அவருக்கு மேல் ஒரு சுரைக்கொடியை முளைப்பித்து நிழலிடுமாறு செய்தான். (ஸூரா - அஸ்ஸா:ப்பாத்; பிரிவு: 5)

25. மேலும், அவரை ஒரு லட்சதிற்கும் அதிகமான மக்களுக்கு தூதராக அனுப்பி வைத்தான். அவர்கள் ஈமான் கொண்டார்கள். ஆகையால் அல்லாஹ் அவர்களை ஒரு குறிப்பிட்ட காலம் வரை வசதிகளை அனுபவிக்கச் செய்தான். (ஸூரா - அஸ்ஸா:ப்பாத்; பிரிவு: 5)

26. குர்ஆன் இறங்குவதற்கு முன் இணைவைப்போர், “முன்னால் வாழ்ந்த சமுதாய மக்களைப் போல எங்களுக்கும் ஒரு வேதம் வந்திருந்தால், நாங்களும் அதனைப் பின்பற்றி அல்லாஹ்வுக்கு நல்லடியார்களாக மாறியிருப்போம்” என்று கூறினார்கள். (ஸூரா - அஸ்ஸா:ப்பாத்; பிரிவு: 5)

27. இப்போது குர்ஆன் வந்து விட்டது. ஆனால் அதனை நிராகரிக்கின்றனர். அவர்களுடைய இந்த நடவடிக்கையின் விளைவினை மிக விரைவில் காண்பார்கள். (ஸூரா - அஸ்ஸா:ப்பாத்; பிரிவு: 5)

## ஒரு பார்வை - பகுதி 3

**தங்களது வழக்கைத் தீர்ப்பதற்காக, தாவூத் (அலை) தொழுகை அறைக்குள் வந்த இரண்டு மலக்குகள் பற்றிய வரலாற்றுடன் ஸூரா ஸாத் தொடங்குகிறது. சுலைமான் (அலை) மற்றும் அவர்களது குதிரைகள் பற்றிய நிகழ்வுகள், ஒரு ஊனமுற்ற மகனைக் கொண்டு அல்லாஹ் அவர்களை எவ்வாறு சோதித்தான் என்பதையும் இங்கு விளக்கப்பட்டுள்ளது.**

## தராவிஹ் - 19: (ரக்அத் 9 முதல் 12)

### ஸூரா - 38, ஸாத்; வசனம்: 1 - 40; பிரிவு: 1 - 3

1. **ஸாத்! அறிவுரை நிறைந்த இந்த குர்ஆன் மீது ஆணையாக ஏக இறையை மறுத்தோர் இறுமாப்பும், விரோதமும் கொண்டிருக்கின்றனர். (ஸூரா - ஸாத்; பிரிவு: 1)**

2. **தாவூத் (அலை) அவர்கள் நற்செயல்களின் மூலம் அல்லாஹ்வின் பக்கமே மீள்பவராக இருந்தார். அல்லாஹ்வைத் துதிபாடுவதில் பறவைகளும், மலைகளும் மற்றும் அதன் கூட்டங்களும் அவருடன் இணைந்திருந்தன. (ஸூரா - ஸாத்; பிரிவு: 2)**

3. **தாவூத் (அலை) அவர்களிடம் இரு நபர்கள் (உண்மையில் அவ்விருவரும் மலக்குகள்) வழக்காட, சுவரேறி குதித்து அவருடைய தொழுகை மாடத்திற்கு வந்தனர். (ஸூரா - ஸாத்; பிரிவு: 2)**

4. **தாவூத் (அலை) அவர்கள் முதலில் பயந்தார்கள். அம்மனிதர்கள், "நீர் பயப்படாதீர்! நாங்களிருவரும் வழக்காளிகள்தான். எங்களில் ஒருவர் மற்றவர் மீது அநீதம் செய்திருக்கிறார். எனவே, எங்களுக்கு இடையே நியாயத் தீர்ப்பு வழங்குவீராக!" என்றனர். (ஸூரா - ஸாத்; பிரிவு: 2)**

5. இரு சகோதரர்களில் ஒருவர், "இவரிடம் 99 ஆடுகள் உள்ளன. என்னிடம் ஒரே ஒரு ஆடுதான் உள்ளது. அந்த ஒரு ஆட்டையும் அவரிடம் கொடுத்துவிடச் சொல்லி என்னை வற்புறுத்துகிறார்" என்றார். (ஸூரா - ஸாத்; பிரிவு: 2)

6. மற்றொருவருடைய வாதத்தைக் கேட்காமலே தாவூத் (அலை) அம்மனிதரிடம், "அவர் உன்னுடைய ஆட்டை கேட்டதன் மூலம் உனக்கு அநீதி இழைத்துவிட்டார். பங்காளிகளில் பெரும்பாலோர் ஒருவர் மீது மற்றவர் எல்லை மீறுகின்றனர். ஈமான் கொண்டு நல்அமல்கள் செய்பவர்கள் அவ்வாறு இல்லை. ஆனால் அப்படிப்பட்டவர்கள் குறைவாகவே இருக்கின்றனர்" என்று தீர்பளித்தார்கள். (ஸூரா - ஸாத்; பிரிவு: 2)

7. தாவூத் (அலை) அவர்கள் அம்மனிதர்கள் உடனே மறைந்துவிட்டதை கண்டார்கள். இது அல்லாஹ்விடமிருந்துள்ள சோதனை என்பதை உணர்ந்தார்கள். மேலும் தான் தவறு செய்துவிட்டோமோ என எண்ணினார்கள். (ஸூரா - ஸாத்; பிரிவு: 2)

8. உடனே தன் இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடி, ருகூஹ் செய்தவராக கீழே விழுந்தார்கள். மேலும் அல்லாஹ்வின்பால் மீண்டார்கள். <u>(ஸஜ்தா - 11)</u> (ஸூரா - ஸாத்; பிரிவு: 2)

9. அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டு சொன்னான்: “தாவூதே! நிச்சயமாக நாம் உம்மை பூமியிலே கலீஃபாவாக (ஆட்சியாளராக) ஆக்கியுள்ளோம். எனவே மக்களிடையே நீதமாக தீர்ப்புச் செய்வீராக! மனோஇச்சையை பின்பற்ற வேண்டாம்”. (ஸூரா - ஸாத்; பிரிவு: 2)

10. தாவூது (அலை) அவர்களுக்கு ஸுலைமான் (அலை) அவர்களை நல்லடியாராக, அவர்களுக்கு மகனாக அல்லாஹ் வழங்கினான். (ஸூரா - ஸாத்; பிரிவு: 3)

11. சுலைமான் (அலை) அவர்களுக்கு நன்கு பயிற்சியளிக்கப்பட்ட உயர்ந்த குதிரைகள், அவர் முன் கொண்டுவரப்பட்ட பொழுது, “அல்லாஹ்வை புகழ்வதிலிருந்து இதன் மேல் உள்ள அன்பு மிகைத்து விட்டதே!” என்றார்கள். (ஸூரா - ஸாத்; பிரிவு: 3)

12. மேலும் அல்லாஹ் அவர்களை சோதிக்க நாடினான். அல்லாஹ் அவர்களை அவரது சிம்மாசனத்தில் ஒரு முண்டத்தை அமர வைக்கப்பட்டதைப் போல ஒரு தோற்றத்தை ஆக்கினான். (அவர்களுக்கு ஓர் ஊனமுற்ற மகன் இருந்தான்). (ஸூரா - ஸாத்; பிரிவு: 3)

13. சுலைமான் (அலை) இறைவனிடம் துஆ செய்தார்கள்: “யா அல்லாஹ்! என்னை மன்னிப்பாயாக! எனக்குப் பிறகு யாருக்கும் கிடைக்காத ஓர் ஆட்சி அதிகாரத்தை எனக்கு அன்பளிப்பாக வழங்குவாயாக! நிச்சயமாக நீ தான் பெரும் கொடைவள்ளலாக இருக்கின்றாய்". (ஸூரா - ஸாத்; பிரிவு: 3)

14. அல்லாஹ் அவர்களுடைய துஆவை ஏற்றுக்கொண்டு அவருக்கு காற்றை வசப்படுத்திக் கொடுத்தான். அது அவரது ஆணையின்பேரில் அவர் எண்ணிய இடத்திற்கு வசதியாக அவரை தூக்கிச்செல்லும். கட்டடங்கட்டுகின்ற, முத்துக்குளிக்கின்ற ஷைத்தான்களையும், சங்கிலியால் விலங்கிடப்பட்டிருந்த வேறு பலரையும் அவருக்கு வசப்படுத்திக் கொடுத்தான். (ஸூரா - ஸாத்; பிரிவு: 3)

15. அல்லாஹ் சுலைமான் (அலை) அவர்களிடம் கூறினான்: “இது நம்முடைய கொடையாகும். கேள்வி கணக்கில்லாத நிலையில், நீர் விரும்பினால் இவற்றைப் பிறருக்குக் கொடுக்கலாம். அல்லது நீரே வைத்துக் கொள்ளலாம்". நிச்சயமாக சுலைமான் (அலை) அவர்களுக்கு அல்லாஹ்வுடைய நெருக்கமும், அழகான உறைவிடமும் உண்டு. (ஸூரா - ஸாத்; பிரிவு: 3)

## ஒரு பார்வை - பகுதி 4

**அய்யூப் (அலை) அவர்களின் வரலாறும், அவர்களுக்கு ஏற்பட்ட கடுமையான நோய்களும் விரிவாக கூறப்பட்டுள்ளன. ஸூரா ஸாத்தின் கடைசிப் பகுதி ஆதம் (அலை) படைக்கப்பட்டதையும், மனிதனை தவறாக வழிநடத்த இப்லீஸ் சத்தியம் செய்ததையும் குறிப்பிடுகிறது.**

## தராவிஹ் - 19: (ரக்அத் 13 முதல் 16)

### ஸூரா - 38, ஸாத்; வசனம்: 41 - 88; பிரிவு: 4 - 5

1. **அய்யூப் (அலை) அவர்கள் தாங்க முடியாத வேதனையில் அல்லாஹ்வை அழைத்து, "துன்பத்தின் மூலமும், வேதனையின் மூலமும் நிச்சயமாக ஷைத்தான் என்னைத் தீண்டிவிட்டான்" என்றார்கள். (ஸூரா - ஸாத்; பிரிவு: 4)**

2. **அல்லாஹ் அவர்களிடம், "பூமியில் உன் பாதத்தை அடிப்பீராக! ஊற்று ஒன்று பொங்க ஆரம்பிக்கும். குடிப்பதற்கும், குளிப்பதற்கும் அந்த குளிர்ந்த நீரைப் பயன்படுத்தி புத்துணர்ச்சி பெற்றுக் கொள்வீராக!" என்று சொன்னான். (ஸூரா - ஸாத்; பிரிவு: 4)**

3. **அல்லாஹ் அய்யூப் (அலை) அவர்களுடைய குடும்பத்தையும் அது போன்ற மற்றவர்களையும் மீண்டும் அவரிடமே ஒப்படைத்தான். அல்லாஹ் அதைத் தன் அருளாகவும் அறிவுடையோருக்குப் படிப்பினையாகவும் செய்தான்.. (ஸூரா - ஸாத்; பிரிவு: 4)**

4. ***அய்யூப் (அலை) நோயுற்ற சமயத்தில் அவரைக் கவனிக்கின்ற விஷயத்தில் அவரது மனைவி பொறுமையிழந்து அல்லாஹ்வை குறை கூறினார். இதனால் அய்யூப் (அலை) கோபமடைந்து, தான் குணமடைந்தவுடன் தன் மனைவிக்கு***

*தண்டனையாக 100 கசையடி கொடுக்க சத்தியம் செய்தார்கள்.* (ஸூரா - ஸாத்; பிரிவு: 4)

5. அல்லாஹ் அதனை நிவர்த்தி செய்ய இலகுவான வழியைக் காண்பித்தான். அல்லாஹ் அவரிடம், "ஒரு பிடி புல்லை உம்கையால் எடுத்து அதன் மூலம் உன் மனைவியை அடிப்பீராக! நீர் சத்தியத்தை முறிக்க வேண்டாம்" என கூறினான். (ஸூரா - ஸாத்; பிரிவு: 4)

6. அல்லாஹ் அய்யூப் (அலை) அவர்களை மிகவும் பொறுமைசாலியாகவும், சிறந்த நல்லடியாராகவும் கண்டான். நிச்சயமாக அவர்கள் எதிலும் அல்லாஹ்வை நோக்கியவராகவே இருந்தார்கள். (ஸூரா - ஸாத்; பிரிவு: 4)

7. வலிமையும், சிந்தனைத் தெளிவும் உடைய இப்ராஹீம், இஸ்ஹாக், யஃகூப் ஆகிய நம் அடியார்களை நினைவு கூறுவீராக! நாம் இவர்களை (மறுமை) வீட்டை நினைவூட்டுவதற்காகவே சிறப்பான முறையில் தேர்ந்தெடுத்தோம். (ஸூரா - ஸாத்; பிரிவு: 4)

8. மேலும் இஸ்மாயீல், அல்யஸஃ, துல்கிஃப்ல் ஆகியோரையும் நினைவு கூறுங்கள். இவர்கள் அனைவருமே சிறந்தவர்களாவார்கள். (ஸூரா - ஸாத்; பிரிவு: 4)

9. நபியே! கூறுவீராக, "ஆதம் படைக்கப்பட்ட நேரத்தில், மேலானோர் - மலக்குகள் ஒன்று கூடி தர்க்கம் செய்து கொண்டிருந்தது பற்றி எனக்கு எந்த ஞானமுமில்லை. (அவை எனக்கு வஹியாக அறிவிக்கப்பட்டதுதான்). நிச்சயமாக நான் அச்சமூட்டி எச்சரிப்பவன்தான் என்றே எனக்கு அறிவிப்பு வந்துள்ளது". (ஸூரா - ஸாத்; பிரிவு: 5)

10. ஆதம் (அலை) படைக்கப்பட்ட நேரத்தில் நடந்த சம்பவத்தை நினைவு கூறுங்கள். அல்லாஹ் எல்லா மலக்குகளிடமும் ஆதம் (அலை) அவர்களுக்கு ஸுஜூது செய்ய கட்டளை இட்டான். அப்போது இப்லீஸ் ஆதம் (அலை) அவர்களுக்கு ஸஜ்தா செய்ய மறுத்து விட்டான். அவன் மிக கர்வத்துடன் நடந்து கொண்டான். அதனால் மிகுந்த வழிகேட்டில் சென்றுவிட்டான். (ஸூரா - ஸாத்; பிரிவு: 5)

11. "கியாமத் நாள் வரையிலும், தேர்ந்தெடுக்கப்பட்ட உன் அடியார்களை தவிர எல்லா மனிதர்களை நான் வழிகெடுத்துக் கொண்டேயிருப்பேன்" என்று அல்லாஹ்விடம் இப்லீஸ் சபதம் செய்தான். (ஸூரா - ஸாத்; பிரிவு: 5)

12. அதற்கு இறைவன், “அது உண்மை. உண்மையையே நான் கூறுகிறேன். நிச்சயமாக, உன்னைக் கொண்டும், உன்னைப் பின்பற்றியவர்கள் அனைவரைக் கொண்டும் நரகத்தை நான் நிரப்புவேன்” என்று கூறினான். (ஸூரா - ஸாத்; பிரிவு: 5)

13. இந்த குர்ஆன் உலகமக்கள் அனைவருக்குமான அறிவுரையாகும். சிறிது காலத்திற்கு பிறகு, நிச்சயமாக இதனுடைய செய்தியை உண்மையென்று நீங்கள் அறிந்து கொள்வீர்கள். (ஸூரா - ஸாத்; பிரிவு: 5)

## ஒரு பார்வை - பகுதி 5

ஸூரா அல்ஜுமர் ஒரே மனிதரிலிருந்து அற்புதமான மனித குலத்தை படைத்ததையும், அல்லாஹ் கருவறையில் இருந்து மனிதனை எவ்வாறு உருவாக்குகிறான் என்பதையும் அற்புதமாக விவரிக்கிறது. அல்லாஹ்வின் வாக்கை நிராகரிப்பவர்களுக்கு மேலேயும் கீழேயும் நெருப்பு சூழ்ந்திருக்கும். அல்லாஹ்வை அஞ்சி வாழ்பவர்களுக்கு சொர்க்கத்தில் உயரமான மாளிகைகள் உள்ளன; அதன் கீழே ஆறுகள் ஓடும்.

## தராவிஹ் - 19: (ரக்அத் 17 முதல் 20)

## ஸூரா - 39, அல்ஜுமர்; வசனம்: 1 - 31; பிரிவு: 1 - 3

1. வல்லமையும், ஞானமும் மிக்க அல்லாஹ்விடமிருந்தே இவ்வேதம் இறங்கியருளப் பெற்றுள்ளது. (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 1)

2. அல்லாஹ் உங்களை ஒரே மனிதரிலிருந்து படைத்தான். பிறகு, அவரிலிருந்து அவருடைய மனைவியை ஆக்கினான். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 1)

3. உங்களுடைய தாய்மார்களின் கருவறையில் ஒரு படைப்புக்குப்பின் ஒரு படைப்பாக மூன்று இருள்களில் உங்களைப் படைத்தான். (கருவானது ஜவ்வால் மூடப்பட்டு, அது நஞ்சுகொடி மூலம் பாதுகாக்கப்படுகிறது. அது வயிற்றின் இருளால் மூடப்பட்டுள்ளது. இவ்வாறாக 3 இருள்கள் உள்ளன). (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 1)

4. அந்த அல்லாஹ்தான் உங்களுடைய இறைவன். அவனுக்கே ஆட்சியதிகாரம் முழுவதும் உரித்தாகும். அவனைத் தவிர வேறு நாயன் இல்லை. அவ்வாறிருக்க, அவனை விட்டும் நீங்கள் எப்படி திசை திருப்பப்படுகிறீர்கள்? (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 1)

5. கா∴பிர்களுக்கு அவர்களுக்கு மேலே நெருப்பினால் ஆன நிழல் சூழ்ந்திருக்கும்; அவர்களுக்கு கீழேயும் நெருப்பினால் ஆன நிழல் சூழ்ந்திருக்கும். இதன் மூலம் அல்லாஹ் தன் அடியார்களுக்கு அச்சமூட்டுகின்றான். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 2)

6. யார் தங்களுடைய இறைவனை உண்மையாக அஞ்சி நடந்து கொள்கிறார்களோ அவர்களுக்கு மேலே உயர்தர மாளிகைகளும், அதற்கு மேலே அடுக்கடுக்கான மாளிகைகளும் உண்டு. அதற்கு கீழே ஆறுகள் ஓடும். இது அல்லாஹ்வின் வாக்குறுதியாகும். அல்லாஹ் தன் வாக்குறுதிக்கு மாறு செய்யமாட்டான். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 2)

7. அல்லாஹ் அழகான செய்திகளை உங்களுக்கு வேதமாக அருளினான். இதில் ஒத்திசைவான பொருள் கொண்ட வசனங்களும், திரும்பதிரும்பக் கூறப்படும் வசனங்களும் உள்ளன. யார் அல்லாஹ்வை பயப்படுகிறார்களோ, அவர்களுக்கு இந்த வசனங்களை கேட்கின்ற போது தோல்களெல்லாம் சிலிர்த்து விடும். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 3)

8. அவர்கள் படிப்பினை பெற வேண்டுமென்பதற்காக அல்லாஹ் இதில் எல்லா வகையான உதாரணங்களையும் குறிப்பிட்டுள்ளான். (ஸூரா - அல்ஜுமர்; பிரிவு: 3)

---------------------------------------------------------------